தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 06.09.2019 (பிற்பகல்)**

**விசாரணை நடைபெற்ற இடம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு**

**முன்னிலை**

## திரு ச.த.தமிழ்குமார் பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

…………….

**வழக்கு எண். SA8731/D/2018**

திரு.பி.கு.பெத்தான் … மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/செயல் அலுவலர்,
அத்தாணி பேரூராட்சி அலுவலகம்,
அத்தாணி, ஈரோடு மாவட்டம். … பொது அதிகார அமைப்பு

•••••••••••••

**ஆணை**

இன்று (06.09.2019) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.பி.கு.பெத்தான் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வீ.இராமகிருஷ்ணன், பொதுத் தகவல் அலுவலர்/செயல் அலுவலர், அத்தாணி பேரூராட்சி அலுவலகம், அத்தாணி, ஈரோடு மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(3)-ன் கீழ் 19.11.2018 அன்று தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 31.07.2018 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 14.09.2018 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

3. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 31.07.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், அத்தாணி பேரூராட்சிக்குட்பட்ட சந்தை மற்றும்

மார்க்கெட் ஆகியவற்றை ஏலத்தில் விட்டதற்கான உத்தரவு நகல், (current allotment Order), சுங்கவரி வசூலிப்பதற்குண்டான நிபந்தனைகள் மற்றும் விதிகளின் நகல்கள், அத்தாணி பேரூராட்சி சந்தை மற்றும் மார்கெட்டின் சுங்கம் வசூலிப்பதற்கான பட்டியலின் நகல், தற்போதைய வருடத்திற்கு சந்தை மற்றும் மார்கெட்டை ஏலத்தில் விடுவதற்கு விளம்பரம் செய்த நாளிதழின் நகல், ஏலத்தில் விடுவதற்கான நடைமுறை தொகுப்பின் நகல், சந்தை மற்றும் மார்கெட் பகுதியில் சுங்கம் வசூலிப்பதற்கான அறிவிப்பு பலகை வைத்ததற்கான ஆவண நகல் போன்ற விபரங்களையும் அவை சம்மந்தப்பட்ட தகவல்களையும் 6 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

4. பொதுத் தகவல் அலுவலர் 29.08.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, மத்திய தகவல் ஆணையம் CIC/SA/A/2014/001472 நாள் 06.04.2015-ன்படி தகவல் வழங்க இயலாது என மறுத்துள்ளார் என தெரிவித்து, 14.09.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் 24.09.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 19.11.2018 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்து, தான் கோரிய இனங்களுக்கான சரியான தகவல்களை பெற்றுத்தருமாறு ஆணையத்தை கேட்டுள்ளார். அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் திருப்திகரமாக இல்லை என ஆணையத்தில் தெரிவித்தார். ஆகவே, முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

6. விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்கள் அதிகமான தகவல்கள் என்றும், அதனால் மேல்முறையீட்டாளருக்கு பதில் அளிக்க காலம் தாமதம் ஏற்பட்டதாகவும் ஆணையத்திடம் தெரிவித்தார்.

7. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு விரிவான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:

- **மேல்முறையீட்டாளருக்கு ஏறத்தாழ 1 வருட காலத்திற்கு மேலாக தாமதமாக பதில் அளித்த பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ10,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் நேரிடையாகவோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்க அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- இப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் அனைத்தையும் **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு விரிவான தகவல்களை அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு**

**அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு** இவ்வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

**(ஒம்/-) (ச.த. தமிழ்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA8731/D/2018**

**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்/ செயல் அலுவலர்,
அத்தாணி பேரூராட்சி அலுவலகம்,
அத்தாணி, ஈரோடு மாவட்டம்.

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**
திரு.பி.கு.பெத்தான்,
எண்.277/2, S.S.M. காம்ப்ளக்ஸ்,
அண்ணாசாலை, தவுட்டுப்பாளையம்,
அந்தியூர் - 638 501. ஈரோடு மாவட்டம்.

Copy to: Judgement File.
Spare/ SM-PC-19/09/2019